
# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் -19

# கிறிஸ்துவின் சரீரமான சபை


## பாகம்-3



Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# கிறிஸ்துவின் சரீரமான சபை பாகம்-3



பன்னிரெண்டு கோத்திரங்கள்

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே, இவ்விதழில் கிறிஸ்துவின் சபை -3ம் பாகத்தைப் பற்றிய உண்மை சத்தியத்தைக் குறித்து ஆராய்ச்சி செய்வோம்.

கிறிஸ்துவின் சபை முதலாம், இரண்டாம் பாகத்தில், கிறிஸ்துவுடன்கூட ஆளுகை செய்வதற்கு முன் நாம் கடந்துவரவேண்டிய மூன்று படிகளைக் குறித்து பார்த்தோம். தேவனுடைய தெய்வீகத்திட்டத்தில் பெந்தெகொஸ்தே நாள் முதல் சபை தெரிந்தெடுத்தல் மிகவும் இரகசியமான முறையில் நடந்துவருகிறது என்பதனையும் அறிந்துகொண்டோம்.

சபையில் தெரிந்துகொள்ளப்பட்ட 1,44,000 பேர் கிறிஸ்துவுடன்கூட ஆளுகை செய்வார்கள்.

**வெளிப்படுத்தல் 3:21**

**'நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்"**

இவர்கள் சிறுமந்தை என்றும் அழைக்கப்படுகின்றனர். இந்த மூன்று படிகளிலும் தரம் பிரித்தல் நடைபெறுகிறது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். நம் இறுதி இலக்கு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாறுவதாகும்.

**ரோமர் 8:29**

**'தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்"**

இயேசுகிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாறுவது என்றால் என்ன?

**வெளிப்படுத்தல் 14:4**

**'ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே. கற்புள்ளவர்கள்**

**இவர்களே. ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே. இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்".**

இதில் கூறப்பட்டதுபோல, அவர் எங்கு சென்றாலும் அவரைப் பின்பற்றுவதிலும், உடன்படிக்கை மட்டும் செய்துவிட்டு நின்றுவிடாமல், உண்மையாகவே அந்த உடன்படிக்கையை தங்களுடைய அன்றாட வாழ்வில் தேவனுடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்து நடப்பதிலும்தான் அடங்கியுள்ளது.

**லூக்கா 9:23**

**'பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்"**

அனுதினமும் அவருடைய சிலுவையை எடுத்துக்கொண்டு பின்பற்றவேண்டும். இந்த 1,44,000 என்ற எண்ணிக்கை முன்குறிக்கப்பட்டது. இப்படியாக கிறிஸ்துவின் சபையைக் குறித்து நாம் கடந்த வகுப்புகளில் தியானித்தவாறு,

- **அநேகர் அழைக்கப்படுகிறார்கள் - இவர்கள் விசுவாசிகள்** என்று அழைக்கப்படுகிறார்கள்
- **சிலர் தெரிந்துகொள்ளப்படுவார்கள் - இவர்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களும்,**
- அவருடன் உடன்படிக்கை செய்த பரிசுத்தவான்களில் **ஒரு சிலர் மாத்திரமே உண்மையுள்ளவர்கள். கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாறுகிறவர்கள்.**

கிதியோனின் சேனை தேர்ந்தெடுப்பதிலும் மூன்று நிலைகள் இருந்ததையும் சென்ற வகுப்பில் அறிந்தோம். (**22000பேர் - அழைக்கப்பட்டோர், 9700 பேர் - தெரிந்துகொள்ளப்பட்டோர், 300 பேர் உண்மையுள்ளோராக இறுதிவரை நிலைத்தவர்கள்**)

இன்று இந்த சிறுமந்தையாகிய 1,44,000 பேர்களைப்பற்றி இன்னும் அதிகமாக தியானிக்க இருக்கிறோம்.

**வெளிப்படுத்தல் 7:4-8**

**'முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன். இஸ்ரயேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப் பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேர்.**

**யூதா கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ரூபன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். காத் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ஆசேர் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். நப்தலி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். மனாசே கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்..**

**சிமியோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்.. லேவி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்.. இசக்கார் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். செபுலோன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம். யோசேப்பு கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். பென்யமீன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்"**

மேலே உள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ள 1,44,000 பேரைக்குறித்து விரிவாகக் காண்போம். கடந்த வகுப்பில் நாம் பார்த்ததுபோல அநேக கிறிஸ்தவர்களுக்கு இவ்வசனங்களில் அநேக சந்தேகங்கள் எழுந்துள்ளது. இச் சந்தேகத்திற்கான காரணங்களைப் பற்றி ஆராய்வோம்.

### காரணம் 1 சுவிசேஷயுகம் முழுவதும் தேர்ந்தெடுக்கப்படுவோர் சிறிய எண்ணிக்கை

1,44,000 என்ற எண்ணிக்கை இந்த சுவிசேஷ யுகத்தில் வாழும் கிறிஸ்தவ மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவான எண்ணிக்கையே.. 2000 வருடங்களில் 1,44,000பேர் மாத்திரம் முத்தரிக்கப்படுகின்றனர் என்பது எவ்வாறு சாத்தியமாகும்? என்று வாதாடுகின்றனர். கிறிஸ்தவ அழைப்பு கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு மாத்திரம் என்று புரிந்துகொண்டவர்களுக்கே இவ்வாதம் எழுந்துள்ளது.

இதில் அநேகருக்கு மூன்று படிகளைக் குறித்த அறிவின்மையினால் முதலாம் படியாகிய விசுவாசமே போதுமானதாக கருதி நின்றுவிடுகின்றனர். ஆனால் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் உண்மை என்னவென்றால், கடந்த 2000 வருடங்களில் வெறும் 1,44,000 பேர் மாத்திரம் உண்மைக் கிறிஸ்தவர்களாக கருதப்படுகிறார்கள் என்பதே.

இந்த எண்ணிக்கையை சராசரியாக கணக்கிட்டுப் பார்த்தால், ஒவ்வொரு வருடத்திற்கும் 72பேர் வீதம் மாதம் 6பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இது உறுதியான கணக்கல்ல, மாறாக இது நமது சிந்தனைக்கே. அப்படியென்றால் தேவனால் எதிர்பார்க்கப்படுகிற தரமும், அதை வளர்த்துக்கொள்வதற்கு அவசியமான கால அவகாசமும் எப்படிப்பட்டதாயிருக்கிறது என்று யோசிக்கவேண்டும்.

இவர்கள் கிறிஸ்தவர்களுள் விசேஷமானவர்கள்( They are the Cream of Christians). இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் இருண்ட காலம் என்று அழைக்கப்படுகிற 1000 வருடங்களில் தேவனுடைய வார்த்தைகள் கிடைக்கப்பெறாததாலும், அந்நாட்களில் வேதமானது அனுமதிக்கப்படாதிருந்ததாலும், சபை வாய்ப்பு அதிகஅளவில் கிடைக்கப்பெற வாய்ப்பில்லை.

மேற்சொல்லப்பட்ட அனைத்துக் காரியங்களையும் நாம் மனதில் வைத்துப் பார்க்கும்போது, இச் சுவிசேஷயுகத்தில் 1,44,000 பேர் மாத்திரமே உண்மைக் கிறிஸ்தவர்களாக உறுதிப்படுத்தப்படுகின்றனர் என்றால் இந்த எண்ணிக்கை அர்த்தம் உள்ளதாகத்தான் கருதப்படுகிறது. இந்த விசேஷமானவர்கள் தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மாற அழைக்கப்படுகிறார்கள்.

## காரணம் 2 கிறிஸ்தவர் மாத்திரம் பரலோகத்திற்கு.. மற்றவர் நரகத்திற்கு..?

அநேகருடைய நம்பிக்கை என்னவென்றால் தேவனுடைய தெய்வீகத் திட்டத்தில் கிறிஸ்தவர்கள் பரலோகத்திற்கும் மற்றவர்கள் நரகத்திற்கும் தங்கள் மரணத்திற்கு பின்பு சென்றுவிடுகின்றனர் என்பதே. இதை மனதில் வைத்து சிந்திக்கும்போது 1,44,000 கிறிஸ்தவர் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் என்ற கருத்து நம்புவதற்கு கடினமாக இருக்கிறது. ஆனால் இதுவரை நாம் பார்த்த பாடங்களிலும், வேத வசனங்களையும் பார்க்கும்போது, இது அனைவருக்குமான தேவனுடைய திட்டமல்ல என்பதனைப் புரிந்துகொண்டோம்.

**1தீமோத்தேயு 4:10**

**'இந்த வார்த்தை உண்மையுள்ளது.. இதனிமித்தம் பிரயாசப்படுகிறோம், நிந்தையும் அடைகிறோம். ஏனெனில் எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்".**

**1தீமோத்தேயு 2:3,4**

**நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.**

இவ்விதமாக தேவனுடைய திட்டத்தில் எல்லா மனுஷரும் இரட்சிப்படையவேண்டும் என்பது தெளிவாக வேதத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்படி, அனைவரும் வேதனை ஸ்தலத்துக்கு செல்லாமல், நாம் பார்த்தபடி, நரகமாகிய மரித்த நிலைக்குச் செல்கிறார்கள். அந்நிலையிலிருந்து அனைவரும் காப்பாற்றப்பட்டு எழுப்பப்படுகிறார்கள்(வெளி 20:13 KJV) இது அனைவருக்குமான மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலாக, கீழ்க்காணும் வசனத்தின்படியே நிறைவேறும்.

'ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்"
- 1கொரிந்15:22.

தேவனுடைய தெய்வீகத் திட்டத்தில் பின்வரும் வகுப்பார் இரட்சிக்கப்படுவார்கள்

- **திவ்ய சுபாவத்திற்கான இரட்சிப்பைப் பெறுகிற - சிறுமந்தை(சபை)**
- **தூதர்களுடைய சுபாவத்திற்கான இரட்சிப்பைப் பெறுகிற - திரள் கூட்டம்**
- **பூமிக்குரிய இரட்சிப்பைப் பெறுகிற - முற்பிதாக்கள் மற்றும் மனுக்குலம்**

இதில் சிறுமந்தை எனப்படுபவர்கள் 1,44,000 பேர் மாத்திரமே. இவர்கள் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் எல்லாரைக்காட்டிலும் பெரிதான இரட்சிப்பைப் பெறுகிறார்கள். இப்பொழுது சந்தேகத்திற்கான மூன்றாவது காரணத்திற்கு வருவோம்.

## காரணம் 3 இஸ்ரயேலின் 12 கோத்திரங்கள் ஒட்டுமொத்த மாம்ச இஸ்ரயேலர்களா?

வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்திலுள்ள 12 கோத்திரங்கள் அனைத்தும் மாம்சீக இஸ்ரயேலர்களைக் குறிக்கின்றனர் என்று அநேகர் நினைக்கின்றனர். கடந்த வகுப்பில் நாம் கண்டதுபோல, இந்த பன்னிரெண்டு கோத்திரங்களுக்கும் ஆவிக்குரிய அர்த்தம் உள்ளன(வெளி 7:4-8). ஆதியாகமம் 49ம் அதிகாரத்தை விரிவாக வாசிக்கையில் அதற்கும் இதற்கும் வித்தியாசம் இருப்பதைக் கண்டுபிடிக்கலாம். வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில் தாண் கோத்திரத்திற்கு பதிலாக மனாசே கோத்திரம் இடம்பெற்றுள்ளது. ஆனால் மனாசே கோத்திரம் உண்மையில் இஸ்ரயேலின் 12கோத்திரங்களில் ஒன்றல்ல என்பது நமக்குத் தெரியும். இதிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்னவென்றால் சபை வாய்ப்பு(வெளி 7:4) பன்னிரெண்டு கோத்திரங்களுக்குச் சென்றாலும், இங்கு குறிப்பிட்டுள்ள இஸ்ரயேலர் - ஆபிரகாம் மற்றும் யாக்கோபின் சந்ததியாகிய மாம்சீக இஸ்ரயேலரை குறிப்பதாக இல்லை. மாறாக அது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைக் குறிக்கின்றது.

**கலாத்தியர் 6:16**

**இந்த பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், *தேவனுடைய இஸ்ரயேலருக்கும* ் சமாதானமும், இரக்கமும் உண்டாயிருப்பதாக**

இவர்கள் கிறிஸ்துவின் சபையாகிய ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாராவர் என்று கருதப்படுகின்றனர்.

**கலாத்தியர் 3:7**

**ஆகையால் விசுவாச மார்க்கத்தார் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக**

## ஏன் இந்த பன்னிரெண்டு கோத்திரங்கள் சபையுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது ?

இதற்கான பதிலை நாம் புரிந்துகொள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கான தேவனுடைய திட்டத்தை வசனங்களில் காண்போம்.

**எபேசியர் 1:4**

**'தமக்கு முன்பாக நாம் அன்பிலே பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே.."**

இவ்வசனத்தின் ஆழத்தை நாம் பார்க்கையில் 1,44,000 என்ற வகுப்பார் உலகம் படைப்பதற்கு முன்பாகவே முன்குறிக்கப்பட்டுள்ளனர் . என்ன ஆச்சரியம் !! ஆனால் 1,44,000 பேரில் தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரையும் தேவன் முன்பதாகவே தீர்மானித்திருக்கிறார் என்று பொருள்கொள்ளக்கூடாது. சபையின் எண்ணிக்கையையும் அதன் வளர்ச்சியையும் தேவன் முன்னதாகவே அறிந்து வைத்திருந்தார். இவர்கள் விசேஷமானவர்கள் . தம் ஒரே பேறான

குமாரனுடைய மணவாட்டி என்று இவர்களை அழைக்கிறார். இந்த வகுப்பாருடைய வளர்ச்சிக்கும், தேர்ந்தெடுத்தலுக்கும் இந்த சுவிசேஷயுகம் முழுவதும் தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். தேவ வசனத்தினால் இவ்வகுப்பாரை வழிநடத்தியும் வருகிறார்.




**சங் 119:105**

**'உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது"**

வேதத்தின்மூலம் இவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**ரோமர் 15:4**

**'தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கை உள்ளவர்களாகும்படிக்கு, *முன்பு எழுதியிருக்கிறவைகள்* எல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது".**

இதிலிருந்து யூதயுகத்தில் மாம்சீக இஸ்ரயேல் மக்களுக்கு நடைபெற்ற அனைத்து காரியங்களும் சுவிசேஷயுக சபைக்கு நிழலாக நடைபெற்றது. இதனை நாம் கீழ்வரும் வசனங்களில் வாசிக்கிறோம்.

**1கொரிந்தியர் 10:11**

**'இவைகளெல்லாம் நமக்குத் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது. உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது"**

## *நிழல்கள் - 1*

உதாரணம் : யூதர்கள் விருத்தசேதனத்தின்மூலம் அடையாளங் காணப்பட்டார்கள் (ஆதி 17:14). ஆனால் சுவிசேஷயுகத்தில் அந்த விருத்தசேதனத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து நாம் வாசிக்கையில்,

**ரோமர் 2:28,29**

**'புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்தில் யூதனானவனே யூதன். எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம். இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது".**

இதிலிருந்து நாம் அறிவது, மாம்சீக இஸ்ரயேலர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு நிழலாக இருக்கின்றனர். முதலாவதாக சுவிசேஷயுகம் துவங்கினபொழுது தேவன் மாம்சீக இஸ்ரயேலர்களுக்குத்தான் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகும் வாய்ப்பைத் தந்தார். ஏனெனில் இரட்சிப்பு நிறைவேறும் முறையை கீழ்க்காணும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**ரோமர் 1:16**

**'கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன், *முன்பு யூதரிலும்'* பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது"**

ஆம். இரட்சிப்படைவதற்கான வாய்ப்பு - பரலோகத்திற்குரிய மற்றும் பூமிக்குரிய இரட்சிப்பு ஆகிய இரண்டுமே முதலாவது யூதருக்கே கொடுக்கப்பட்டது. இந்தக் கருத்தை சிந்தையில் கொண்டு பார்க்கும்பொழுது, இயேசு புறஜாதி ஸ்திரீக்கு கூறின வார்த்தைகளை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

**மத்தேயு 15:26,27**

**'அவர் அவளைநோக்கி : பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல... காணாமற்போன இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல என்றார்".**

உண்மையில் இந்த அழைப்பு இயேசுவின் ஞானஸ்நானத்திலிருந்து 7 வருடங்களுக்கு தனிப்பட்ட முறையில் இஸ்ரயேல் ஜனங்களுக்கு மட்டும் சென்றது.

இவ்வளவு பெரிதான அழைப்பும் ஆசீர்வாதமும் அவர்களுக்கு முதலில் சென்றபோதிலும் அநேகர் நம்பவில்லை. ஒரு சிலர் மாத்திரமே இவ்வழைப்பை ஏற்றனர். பலர் நிராகரித்துவிட்டதை கீழ்க்காணும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**ரோமர் 9:27**

**'இஸ்ரயேல் புத்திரருடைய இலக்கம் சமுத்திரத்தில் மணலத்தனையாயிருந்தாலும், மீதியாயிருப்பவர்கள் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள்"**

இப்பொழுது 'இரட்சிக்கப்படுவார்கள்" என்ற வார்த்தையை மாத்திரம் எடுத்துக்கொள்வோம். நாம் ஏற்கனவே படித்ததுபோல், தேவனுடைய திட்டத்தில் இருவிதமான இரட்சிப்பு உள்ளது.

பரலோக இரட்சிப்பு - சுவிசேஷ யுகத்தில் நிறைவேறுகிறது (சபை மற்றும் திரள்கூட்டம்)
பொதுவான பூமிக்குரிய இரட்சிப்பு -ஆயிரம் ஆண்டு அரசாட்சியில் நிறைவேறுகிறது (யோவான் 11:25-26, யோவான் 10:14-16 ஒப்பிட்டுப் பார்க்கவும்)

'இரட்சிக்கப்படுவார்கள்" என்று இங்கு குறிப்பிடப்பட்டது, பரலோக இரட்சிப்பாகிய முதலாம் இரட்சிப்பைக் குறிக்கிறது. இதை கீழ்க்காணும் வசனம் கூறுகிறது.

**எபிரேயர் 2:4**

**'முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்...அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்தஆவியின் வரங்களினாலும்,**

**தேவன்தாமே சாட்சிகொடுத்ததுமாயிருக்கிற *இவ்வளவு பெரிதான இரட்சிப்பை* குறித்து நாம் கவலையற்றிருப்போமானால்.. ”**

இந்த நிருபம் மாம்சத்தின்படி யூதர்களாகிய எபிரேயர்களுக்கு எழுதின நிருபம் என்பதை நாம் அறியவேண்டும். இவ்வளவு பெரிதான இரட்சிப்பு என்று தேவன் குறிக்கின்றபோதிலும், குறைந்த பட்ச யூதர்களே இவ்வாய்ப்பினை அறிந்து ஏற்றுக்கொண்டனர். இப்படியாக மீதியான இஸ்ரயேலருடைய நிலைமை என்ன என்று வாசிக்கையில்,

**ரோமர் 11:7-8**

**‘இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள். தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள். மற்றவர்கள் இன்றையத் தினம்வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்”.**

இந்த ஜனங்கள் ஆபிரகாமிற்கு வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதத்தை மாத்திரம் மேசியா மூலமாக வரும் என்று எதிர்பார்த்து காத்திருந்தனர்(ஆதியாகமம் 22:17-18 வாசித்தறியவும்).

ஆனால் அவர்கள் பூமிக்குரிய இராஜ்ஜியத்தை மாத்திரம்தான் கண்டுபிடித்தனர். ஆவிக்குரிய ஆசீர்வாதம் அடையப்போகும் மேலான வாய்ப்பை கண்டுபிடிக்க தவறிவிட்டனர் என்று வாசிக்கிறோம்

**லூக்கா 24:21**

**‘அவரே இஸ்ரயேலை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது”.**

**அப்போஸ்தலர் 1:6**

**‘அப்பொழுது கூடி வந்திருந்தவர்கள் அவரை நோக்கி : ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரயேலருக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்”.**

இவர்கள் ஆவிக்குரிய மகிமை நிறைந்த பாகத்தை உணர்ந்துகொள்ளாததால், தேவன் இந்த மேலான அழைப்பை புறஜாதிகளுக்கு விடுத்தார்

**ரோமர் 9:24**

**‘அவர் யூதரிலிருந்து மாத்திரமல்ல, புறஜாதிகளிலிருந்து நம்மை அழைத்திருக்கிறாரே”**

இவர்கள் எல்லா ஜாதியிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், தேசங்களிலுமிருந்து எடுக்கப்படுகிறார்கள் -

**வெளிப்படுத்தல் 5:9**

**‘சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு”**

உண்மையாகவே இவர்கள் **‘புதிய ஜாதியாக”** இருக்கிறார்கள் என்று வாசிக்கிறோம்

1பேதுரு 2:9

**‘நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்”**

இந்த புதிய தேசத்தார் அல்லது பரிசுத்த ஜாதியார் மாம்சீக இஸ்ரயேலரைநிழலாகக் கொண்டுள்ளனர். இவ்விதமாக வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இஸ்ரயேலின் 12 கோத்திரங்கள் தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரயேலரை அடையாளப்படுத்துகின்றனர். உண்மையில் இவர்களுக்குள் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவற்றுள் சிலவற்றைக் காணலாம்.

சாலமோன் ராஜாவின் மரணத்திற்கு பின்பு இஸ்ரயேல் தேசம் இரண்டாக பிரிக்கப்பட்டது.

**1.இஸ்ரயேல்(வடக்கு) பத்து கோத்திரங்களைக் கொண்டது. தலைநகரம் : சமாரியா**

**2.யூதா (தெற்கு இரண்டு கோத்திரங்களைக் கொண்டது தலைநகரம் : எருசலேம்**

தேவனுடைய ஆசீர்வாதம் இஸ்ரயேலைக் காட்டிலும் யூதாவுக்கு அதிகமாக கொடுக்கப்பட்டது(இயேசுவும் , ஐஸ்வரியவான் லாசரு உவமையில், யூதா கோத்திரத்தாரை ஐஸ்வரியவானுக்கு ஒப்பிடுகிறார்)
இது சீர்திருத்தலின் நாட்களுக்குப் பின்பு சபை இரண்டு பிரிவாகப் பிரிந்ததை நிழலாகக் குறிப்பிடுகிறது.

**ரோமன் கத்தோலிக்க சபை(பெரும்பாலோர்) - புராட்டஸ்டன்ட் (சிறுபான்மையினர்)**

தேவனுடைய ஆசீர்வாதம் புராட்டஸ்டன்ட் மேல் அதிகமாக இருந்தது. ஏனென்றால் இம்மக்கள் வேதத்திற்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்தனர். மேலும் இஸ்ரயேலர்கள்,
பெயர் இஸ்ரயேலர்கள் மற்றும் உண்மையான இஸ்ரயேலர்கள் என்று பிரிக்கப்பட்டார்கள்.
அதேபோல் ஆவிக்குரிய இஸ்ரயேலரிலும் பெயர்க் கிறிஸ்தவர்கள் மற்றும் உண்மையான கிறிஸ்தவர்கள் என்று பிரிக்கப்பட்டனர்.

## *நிழல்கள் 2*

**யாக்கோபிற்கு 12 குமாரர்கள் மூலம் - மாம்சீக இஸ்ரயேலர்கள் உருவானதுபோல,**
**12 அப்போஸ்தலர்கள் மூலமாக - ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் உருவானார்கள்.**

இதைக்குறித்து நாம் வாசிக்கையில்,

எபேசியர் 2:20

**‘அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசுகிறிஸ்து தாமேமூலைக்கல்லாயிருக்கிறார்”**







ஆம் இந்த பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும் சபைக்கு அஸ்திவாரக் கற்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள்..


**வெளிப்படுத்தல் 21:14**

**'நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன. அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன".**

இது மகா நகரமாகிய புதிய எருசலேமாகும். இது 12000 முழம் பக்கஅளவு கொண்ட ஒரு சதுரங்கமாகும் (Cube).

**வெளிப்படுத்தல் 21:16**

**'அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதன் அகலமும் நீளமும் சமமாயிருந்தது. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான். அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது. அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது"**



இது 12 பக்கங்களைக்கொண்ட சதுரங்கமாக இருக்கிறது. இதன் பக்கங்களைப் பெருக்குகையில், 12 ஒ12,000 ஸ்ரீ 1,44,000 என்ற இலக்கத்தை விடையாகத் தருகிறது. இது இயேசு மற்றும் சபையைக் கொண்ட தெய்வீக அரசாட்சியின் அடையாளமாக இருக்கிறது. (வேதத்தில் நகரம்(City) என்பது அரசாட்சிக்கு( Government) அடையாளம்). இது மூன்றாம் உலகத்தின் புதிய வானங்கள் அல்லது இயேசுவின் ராஜ்யமாகும்.

இப்பொழுது இறுதி நிழலாக இஸ்ரயேல் என்ற பெயர் எப்படி அத்தேசத்திற்கு வந்தது என்று பார்ப்போம். இதைக் குறித்து வாசிக்கையில்,

**ஆதியாகமம் 32:24,28**

**'யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான். அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி அவனை மேற்கொள்ளாததைக் கண்டு.. உன்பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் *இஸ்ரயேல்* என்னப்படும். தேவனோடும்**



**மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்"**

அன்றுஇரவு நடந்த போராட்டத்திற்குப்பின், **யாக்கோபின் நாமம் 'இஸ்ரயேல்" என்று மாற்றப்பட்டது. இஸ்ரயேல் என்ற நாமம், 'தேவனையும் மனிதனையும் மேற்கொண்டவன்"** என்று பொருள்படும். இரவு என்பது சுவிசேஷயுகத்தின் இருண்ட பகுதியைக் குறிக்கும்.

**ஏசாயா 60:2**

**'இதோ இருள் பூமியையும் காரிருள் ஜனங்களையும் மூடும்"**

இந்த இரவைக்குறித்து நாம் சங்கீதத்திலும் வாசிக்கலாம்

**சங்கீதம் 30:5**

**'சாயங்காலத்தில் ( In English - Night) அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்"**

இந்த இரவு, முழு சுவிசேஷ யுகத்தையும் உள்ளடக்கியுள்ளது. இங்கு 'போராடி" என்று கூறியிருப்பது எதைக்குறிக்கும்?

**எபேசியர் 6:12**

**'ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு".**

இது தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கான போராட்டமாகும்.

மேற்கொள்வது என்றால் என்ன?
சபைக்கு வரும் விசுவாசப்போரில் வெற்றி பெறுவதே மேற்கொள்வது எனப்படும்.

**வெளிப்படுத்தல் 3:21**

**'நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்"**

தீமையின் சக்திகளோடு உள்ள போராட்டத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் நல்ல போராட்டத்தைப் போராட அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இது தீமையை நன்மையினால் வெல்லும் போராட்டம்.

**1பேதுரு 1:7**

**'அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்"**

**யாரெல்லாம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள்?**

யாக்கோபு தேவதூதனை மேற்கொண்டு இஸ்ரயேலானதுபோல, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் இப்போராட்டங்களில் வென்று விசுவாசத்தின்மூலமாக தேவனுடைய இஸ்ரயேலர்களாக மாறவேண்டும். இவர்களின் விசுவாசத்தை சோதிப்பவர் யார்?

**உபாகமம் 13:3**

**'அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக. உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூறுகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்".**

சர்வ வல்லமையுள்ள தேவன்தாமே சோதிக்கிறவராவார். இவ்வாறு சபையானது விசுவாசத்துடன் போராடி இப்பிரபஞ்சத்தை மேற்கொள்ளவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. மேற்கொண்டவர்களுக்கு மேலான ஆசீர்வாதத்தை தேவன் தருவார். இதைக்குறித்து நாம் வாசிக்கையில்,

**யாக்கோபு 1:12**

**'சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான் "**

யாக்கோபு தேவதூதனோடு போராடியது, சபை வகுப்பார் தேவனால் சோதிக்கப்பட்டு நிரூபிக்கப்படுவதற்கு அடையாளம். இதிலிருந்து மாம்சீக இஸ்ரயேலர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு நிழலாக இருப்பதை அறிந்துகொள்ளலாம். இப்பொழுது இறுதியாக 12 கோத்திரங்களின் நாமங்களுக்கும், வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட 12 கோத்திரங்களுக்கும் உள்ள முக்கியத்துவங்களைக் காண்போம்.

உலகத்தில் சமீப காலங்களில் மனோதத்துவ நிபுணர்கள் மனிதர்களின் ஆளுமைப் பண்புகள் 12 வகையான குணாதிசயங்களை உடையதாகக் கூறுகின்றனர். இந்த 12 விதமான குணாதிசயங்களுக்கும், வருடத்தின் 12 மாதங்களுக்கும் ஒரு தொடர்பு இருப்பதைக் காண்கிறோம். இது மாத்திரமல்ல, இப்பன்னிரண்டு கோத்திரங்கள் பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு நிழலாய் இருக்கின்றனர்.

ஆதலால் 12 வகையான குணாதிசயங்கள் அல்லது ஆளுமை பண்புகளுடைய மனிதர்களாக பிரிகின்றனர். ஆகவே 12 குணங்களில் ஒவ்வொருவரையும் தேவன் தெரிந்தெடுத்து 12 குணாதிசயங்களைக் கொண்ட மனிதர்களை வழிநடத்தவும் கற்பிக்கவும் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில் உள்ள கோத்திரங்களின் நாமங்களை ஆராய்ந்து அவைகளை ஆதியாகமம் 49ம் அதிகாரத்தில், யாக்கோபு அவர் மரிக்கும் தருவாயில் அவரது 12 குமாரர்களுக்கு தீர்க்கதரிசனமாக உரைத்த வார்த்தைகளோடும், அவர்களுடைய பெயர்களோடும் ஒப்பிடும்போது அவர்களுடைய குணாதிசயங்கள் ஒத்துப்போகின்றன.

இதைக்குறித்து பார்ப்போம்.

இஸ்ரயேலின் முதலாம் கோத்திரம் ரூபன். ஆனால் வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில் யூதா கோத்திரம் முதலாவதாக இடம்பெற்றுள்ளது. இது ஏன்? ஏனென்றால் யூதா கோத்திரத்தில் தான் இயேசு பிறந்தார். இக்கோத்திரங்களைக் குறித்தும், அதற்குள் மறைந்திருக்கும் விசேஷமான காரியங்களைக் குறித்தும் காண்போம்.

## ரூபன் (REBUAN)

ரூபன் கோத்திரத்தைக் குறித்து வேதத்தில்,

**ஆதியாகமம் 49:3**

**'நீ என் சேஷ்டபுத்திரன். நீ என் சத்துவமும். என் முதற்பெலனுமானவன். நீ மேன்மையில் பிரதானமும் வல்லமையில் விசேஷமுமானவன்"**

சத்துவம் என்றால் என்ன?

சத்துவம் என்றால் வல்லமை அல்லது திறமைகள் என்று பொருள் கொள்ளலாம். இவர்கள் சபையில் ஐந்து தாலந்து பெற்றுள்ள வகுப்பார் ஆவர். சபையில் ஒருசிலருக்கு மாத்திரமே இத்திறமைகள் அமையும்- மத்தேயு 25:20 . அத்தாலந்துகள், நேரம் (Time)ஆரோக்கியம்(Health) பணபலம்(Wealth), மனத்திறமைகள்(Mental Talents) செல்வாக்கு(Influence) ஆகியவையாகும். இவர்கள் தண்ணீரைப்போல நிலையற்றவர்களாக அல்லது மேட்டிமையில் விழுந்துபோகும் ஆபத்து உள்ளது. அதைக்குறித்து வாசிக்கையில்,

**ஆதியாகமம் 49:4**

**'தண்ணீரைப்போல தளம்பினவனே நீ மேன்மை அடையமாட்டாய். உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேல் ஏறினாய். நீ அதைத் தீட்டுப்படுத்தினாய்"**

## சிமியோன்

சிமியோன் கோத்திரத்தைக் குறித்து நாம் வாசிக்கையில்,

**ஆதியாகமம் 49:5**

**'சிமியோனும் லேவியும் ஏக சகோதரர்கள். அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள்"**

இவர்களுக்கு அதிக முன்கோபமும் , உணர்ச்சி வசப்படுகிறவர்களாயும் இருப்பர். தங்கள் சகோதரி தீனாளுக்காக சீகேமியரைக் கொன்று பழிதீர்த்ததில் இவர்களது சுபாவம் வெளிப்படுகிறது. இம்மாதிரியான குணநலம் சபையில் இல்லை. ஆகவே இவர் பிறக்கும்போது அவருடைய தாய் கூறினதைப் பார்த்தால்...

**ஆதியாகமம் 29:33**

**'நான் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி, இவனையும் எனக்குத்**

**தந்தார் என்றுசொல்லி, அவனுக்கு சிமியோன் என்று பேரிட்டான்"**

சிமியோன் என்ற பெயருக்கு 'கேட்குதல்" என்று பொருள். இவர்கள் தங்களுடைய வாழ்வில் அநேக கஷ்டங்களையும் உபத்திரவங்களையும் அடைந்ததால் கிடைத்த அனுபவங்களின்மூலம் மற்றவர்களுடைய கஷ்டங்களை பொறுமையோடும் இரக்கத்தோடும் கேட்கும் குணாதிசயம் பெற்றிருப்பார்கள்

## லேவி

லேவியின் பெயரில் அடங்கியுள்ள அர்த்தத்தின்மூலம் இவரைப் புரிந்துகொள்கிறோம்.

**ஆதியாகமம் 29:34**

**'அவர் இப்பொழுது என்னோடே சேர்ந்திருப்பார் என்று சொல்லி அவனுக்கு லேவி என்று பேரிட்டான்"**

லேவி என்றால் பற்றுதல் என்று பொருள்படும். தேவனிடம் அதிகமாக பற்றுதலுடன் இருப்பதோடுகூட, தேவனுடைய ஊழியத்தில் முழு நேரமாகவும் ஈடுபடுவார்கள்.

## யூதா

யூதா என்றால் ***துதித்தல்*** அல்லது ***புகழ்தல்*** என்று பொருள்

**ஆதியாகமம் 49:8**

**'யூதாவே சகோதரரால் புகழப்படுபவன் நீயே.."**

இவர்களுடைய வாழ்க்கையும், செயல்பாடுகளும், தங்கள் சுயத்தை வெறுப்பதன்மூலம் தேவனை மகிமைப்படுத்தும். இக்கோத்திரத்தில் முக்கியமாக இடம்பெற்றவர் இயேசு. இவ்வகுப்பாரில் சிலர் தேவனை மகிமைப்படுத்தும் துதி பாடல்களை எழுதுவது மற்றும் பாடுவது போன்றவற்றின்மூலம் தேவனைத் துதிப்பார்கள்.

### செபுலோன்

செபுலோன் கோத்திரத்தைக் குறித்து நாம் வாசிக்கையில்,

**ஆதியாகமம் 49:13**

**'செபுலோன் கடல்துறை அருகே குடியிருப்பான்.."**

செபுலோன் என்றால் 'வாசம் செய்கிற இடம்" என்று பொருள் **(ஆதி 30:20)**. இவர்களுக்கென்று தனிப்பட்ட முறையில் வாசம் செய்கின்ற இடம் இல்லை என்றபோதிலும், லூக்கா9:58இல் கூறியதுபோல் வாழ்கின்ற வகுப்பாரைக் குறிக்கிறது.

**லூக்கா 9:58**

**'நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும்உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை "**


தேவனுடைய ஊழியத்தை ஒவ்வொரு இடமாக சென்று செய்வர். இவர்கள் தங்களை முழுவதுமாக தாழ்த்துகிறவர்கள். இந்த வகுப்பார், '..இந்த உலகம் எனக்குரிய வீடு அல்ல, அதில்நான் ஒரு பரதேசி...” என்ற வார்த்தையைப் பின்பற்றி வாழ்பவர்கள்.

**இசக்கார்**

இசக்கார் கோத்திரத்தைக் குறித்து நாம் வாசிக்கையில்,

**ஆதியாகமம் 49:14**

**'இசக்கார் இரண்டு பொதியின் நடுவே படுத்துக்கொண்டிருக்கிற பலத்த கழுதை”**



இவ்வகுப்பார் கழுதைக்கு ஒப்பிடப்படுகின்றனர். இன்று கழுதை கேவலத்திற்கு உரியதும் பரியாசத்துக்குரியதுமான மிருகமாய்க் கருதப்படுகின்றது. ஆனால் வேதத்தில் அப்படி பொருள்படுவதில்லை. உண்மையில் இம் மிருகம் கனத்திற்குரிய மிருகம். இயேசு தன் ஊழிய நாட்களில் அதன்மீது ஏறிவந்தார் **(சகரியா 9:9, மத்தேயு 21:7)**. இம்மிருகம் பாரம் சுமப்பதற்கு மாத்திரமல்ல, மிகவும் உபயோகமான மிருகமும்கூட.

இசக்கார் வகுப்பார் எவ்விதத்தில் கழுதைக்கு ஒப்பிடப்படுகின்றனர்?

**ஆதியாகமம் 49:15**

**'அவன், இளைப்பாறுதல் நல்லது என்றும், நாடு வசதியானது என்றும் கண்டு, சுமக்கிறதற்குத் தன் தோளைச் சாய்த்து பகுதி கட்டுகிறவனானான்.”**

இவ்வகுப்பார் அயராது தேவனுக்கென்று உழைப்பவர்கள். தங்கள் இரட்சிப்புக்கு மாத்திரமல்ல, மற்றவர்களின் இரட்சிப்பிற்காகவும் பாடுபடுகிறவர்கள். இங்கு இரண்டு பொதி என்று எதைக் குறிப்பிடுகிறது? இதற்கான பதிலை வாசிக்கலாம் -

**1தீமோ 4:16**

**'உன்னைக் குறித்தும் உன் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச்செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்வாய்”**

இவர்கள் அவர்களுடைய இரட்சிப்பு மற்றும் மற்றவர்களுடைய இரட்சிப்புக்காக தேவனுடைய அறுவடை வேலையில் எடுக்கும் பிரயாசங்களே இரண்டு பொதியாகும்.

**மனாசே** (தாண் கோத்திரத்திற்கு பதிலாக)

இப்போது தாணைக் குறித்தும் இவ்வகுப்பார் குறித்தும் விரிவாகக் காண்போம்

**ஆதியாகமம் 49:16-17**

**'தன் ஜனத்தை நியாயம் விசாரிப்பான். தாண், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன்**

**மல்லாந்து விழும்படியாய் அதின் குதிங்காலை கடிக்கிறதற்கு வழியில் கிடக்கிற சர்ப்பத்தைப் போலவும் இருப்பர்"**

இவ்வகுப்பார் தங்கள் உடன் சகோதரர்களை விமர்சிக்கும் கூட்டத்தார். மற்றவர்களை நியாயந்தீர்ப்பதால் இவர்கள் சாபத்திற்குரியவர்களாக ஒப்பிடப்படுகின்றனர். ஆனால் உண்மையாக நியாயந்தீர்த்தல் என்பது ஒருவருடைய இருதயத்தின் எண்ணங்களை தெளிவாக நிதானிப்பதன் அடிப்படையில் செய்யக்கூடியதாகும். ஆனால் நம்மில் ஒருவர் மற்றொருவருடைய கிரியையை வேண்டுமானால் நிதானிக்கக்கூடும். ஆனால் இருதயத்தை நிதானிப்பது கூடாது . இந்த வகுப்பார் இவ்விஷயத்தில் எல்லைமீறி நடப்பதைப் பார்க்கிறோம். மேலும் தாண், சர்ப்பமாகவும் குறிப்பிடப்படுகிறார். அதாவது, யூதாஸ்காரியோத் போன்ற வஞ்சகனாக இருக்கிறான். இங்கு 'குதிரையின் குதிங்காலைக் கடிக்கிற.." என்பது எதைக்குறிக்கிறது? இங்கு அனைத்தும் அடையாள பாஷையில் கூறப்பட்டுள்ளதை நாம் கவனிக்கவேண்டும். குதிரைகள் என்பது உபதேசங்களைக் குறிக்கும்(ஏசாயா 31:1-3). சிறுசிறு வஞ்சகங்களின்மூலம் உபதேசத்தோடு விளையாடி, தவறான பாதையில் வழிநடத்தி, தவறாக வசனங்களை வியாக்கியானம் பண்ணி,'குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன்" மல்லாந்து விழப் பண்ணுகிறவர்களைக் குறிக்கும். உண்மையில் தேவனுடைய வார்த்தையை போதிக்கிறவன் இதைக்குறித்து எச்சரிக்கையுள்ளவராக நடப்பது அவசியமாக இருக்கிறது. இவர்கள் இவ்விதமாக தகுதியற்றவர்களாக காணப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக மனாசே(மறத்தல்) இடம் பெறுவதைக் காண்கிறோம். இக்கூட்டத்தார் உலகப்பிரகாரமான குடும்பப்பிரச்சனை, எதிர்ப்புக்கள், பொருளாதாரப் பிரச்சனை உடலநலக் குறைவுகள் ஆகிய அனைத்து பிரச்சனைகளையும் மறக்கக்கூடிய விசேஷ தன்மையைப் பெற்றிருந்து, அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

**சங்கீதம் 45:10,11**

**'குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்து சிந்தித்துக்கொள். உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார். அவர் உன் ஆண்டவர். ஆகையால் அவரைப் பணிந்துகொள்".**

## காத்

காத் குறித்து நாம் வாசிக்கையில்,

**ஆதியாகமம் 49:19**

**'காத் என்பவன்மேல் ராணுவக்கூட்டம் பாய்ந்துவிழும். அவனோ முடிவிலே அதின்மேல் பாய்ந்து விழுவான்"**

காத் என்பதற்கு **'சாதகம்"** என்று பொருள். இவர்கள் தங்கள் அனைத்து சக்திகளையும் செலுத்தி தங்கள் பிள்ளைகள் சத்தியத்திலும், தேவ சாயலிலும் வளர உதவுகிறவர்கள். இதில் பெரும்பாலோர் சகோதரிகளே. ஆம். சகோதரிகளுக்கான இரட்சிப்பின் வழியைக் குறித்து நாம் வாசிக்கிறோம் -

1தீமோத்தேயு 2: 15

**‘தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்”.**

வீட்டிலிருந்து செய்யும் வேலைகள் மற்றும் குழந்தைகளை நல்வழியில் வளர்ப்பது சுலபமான வேலையல்ல. இப்பேர்ப்பட்ட தாய்மார்களை கொண்ட பிள்ளைகள் பாக்கியவான்கள்.

## ஆசேர்

ஆசேர் கோத்திரத்தைக் குறித்து நாம் வாசிக்கையில்,

ஆதியாகமம் 49:20

**‘ஆசேருடைய ஆகாரம் கொழுமையாயிருக்கும். ராஜாக்களுக்கு வேண்டிய ருசி வார்க்கங்களை அவன் தருவான்”**

ஆசேர் என்றால் **‘மகிழ்ச்சி”** என்று பொருள்**(ஆதி 30:13)**. இவ்வகுப்பார் எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பர். எந்த சூழ்நிலையிலும் மற்றவர்களை ஊக்குவித்து, உற்சாகப்படுத்துகிறவர்கள். இவர்கள் அப்.பவுலின் வார்த்தைகளைப் பின்பற்றுவதினால் சந்தோஷப்படுகிற கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள்.

பிலிப்பியர் 4:4

**‘கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் . சந்தோஷமாயிருங்கள் என்றுமறுபடியும் சொல்லுகிறேன்.**

**1தெசலோனிக்கேயர் 5:16 - ‘எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்”**

## நப்தலி

நப்தலி கோத்திரத்தைக் குறித்து நாம் வாசிக்கையில்,

ஆதியாகமம் 49:21

**‘நப்தலி விடுதலைபெற்ற பெண்மான். இன்பமான வசனங்களை வசனிப்பான்”**

நப்தலி என்றால் **‘போராடுபவர்”** என்று பொருள்( 30:7,8).

ஆதியாகமம் 30:8


**‘நான் மகா போராட்டமாய் என் சகோதரியோடே போராடி மேற்கொண்டேன் என்று சொல்லி, அவனுக்கு நப்தலி என்ற பேரிட்டாள்”**

இவர்கள் தேவனோடு ஜெபத்தில் போராடுகிறவர்கள். இவர்கள் தங்கள் நேரங்களை ஜெபிப்பதில் செலவிடுகிறவர்கள். அறுவடை வேலைக்காகவும், உடன் சகோதரர்களின் நலனுக்காகவும் அதிகமாக ஜெபிப்பார்கள். இவர்கள் ஜெப வீரர்கள்என்று அழைக்கப்படுகின்றனர்.

## யோசேப்பு

யோசேப்பு கோத்திரத்தைக் குறித்து நாம் வாசிக்கையில்,

**ஆதியாகமம் 49:22**



**'யோசேப்பு கனிதரும் செடி அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனி தரும் செடி, அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்"**

யோசேப்பு என்றால் **'கூட்டித் தருதல்"** (Adding) என்று அர்த்தம்.

**ஆதியாகமம் 30:24**

**'இன்னும் ஒரு குமாரனைக் கர்த்தர் எனக்குத் தருவார் என்றும் சொல்லி, அவனுக்கு யோசேப்பு என்று பேரிட்டான்"**

இவ்வகுப்பாருக்கு பல திறமைகள் இருக்கும். இவர்கள் கனிதரக்கூடிய குணாதிசயத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் எந்த ஒரு தனிப்பட்ட வேலையிலும் முழுமை பெறாமல் இருப்பார்கள். சத்தியத்தின் உடன் வேலைகளுக்கு மிகவும் உபயோகமானவர்கள்.

## பென்யமீன்

இறுதியாக, பென்யமீன் கோத்திரத்தைக் குறித்து நாம் வாசிக்கையில்,

**ஆதியாகமம் 49:27**

**'பென்யமீன் பீறுகிற ஓநாய். காலையில் தன் இரையைப் பட்சிப்பான். மாலையில் தான் கொள்ளையிட்டதைப் பங்கிடுவான் என்றான்".**

பென்யமீன் என்றால் வலது கரம் என்று அர்த்தம். பென்னோனி என்ற பெயரை யாக்கோபு பென்யமீன் என்று மாற்றி வைத்தார். பென்னோனி என்றால் துயரத்தின் மகன் என்று அர்த்தம். ராகேல் இவன் பிறப்பின்போது மரித்ததால் இப்பெயர் வந்தது. இவ்வகுப்பார் சத்தியத்திற்காக தேவனால் பயன்படுத்தப்படும் சகோதரர்களுக்கு வலது கரமாக செயல்படுகிறவர்கள்.

வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில் 12 கோத்திரங்களைக் குறித்தும் அதில் மறைந்திருக்கும் ஆவிக்குரிய அர்த்தங்களையும் கண்டோம். இவைகள் இயேசுகிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களாகிய **'அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாகிய 1,44,000" பேர்களாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறார்கள**' என்றும் உறுதிப்படுத்திக்கொண்டோம்.

***தேவனுடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக, ஆமென்.***

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/bibleresearch/